| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 395/2012 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | வையாபுரி | நாள் | 22.03.2021 |
| தகப்பனார் பெயர் | குப்பண்ண கவுண்டர் | | |

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வாதி பழனியப்பன் என்னுடைய தம்பி. எங்களுடைய குடும்பத்தில் நான் தான் மூத்தவர் என்றால் ஆமாம். வாதி பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் பக்கத்து நிலக்காரரின் சொத்துக்களையும் சேர்த்து வழக்கு போட்டுள்ளார். பதில் வழக்குரையில் வழக்கில் சில சொத்துக்கள் மூன்றாம் நபர்களுக்கு பாத்தியப்பட்டது என கூறியுள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் யார் யார் சேர்ந்து பதில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் நான் மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கில் எந்தெந்த சொத்துக்களுக்கு எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. 3 ம் நபரின் சொத்து இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அந்த நபரிடம் இதுசம்பந்தமாக கூறினேனா என்றால் கூறினேன். அவருடைய பெயர் என்னவென்றால் சின்னப்பையன் மகன் மணி. மணியின் சொத்துக்களையும் வழக்கில் சேர்த்துள்ளதாக பதிலில் கூறியுள்ளேனா என்றால் அது குறித்து கூறி என்னுடைய வழக்கறிஞரின் அதற்கான ஆவணத்தை ஒப்படைத்துள்ளேன். அது கிரைய பத்திரமா என்றால் ஆமாம். யார் பெயரில் உள்ளது என்றால் சின்னப்பையன் மகன் மணி பெயரில் உள்ளது. எந்த வருடத்திய பத்திரம் என்றால் 10 வருடங்களுக்கு முன்பு உள்ள பத்திரம். அதில் என்ன சர்வே எண், எவ்வளவு விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. யாரிடம் எவ்வளவு நிலத்தை கிரையம் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்பது தெரியாது. இந்த வழக்கு எந்த தேதியில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் தேதி தெரியாது. இறந்துபோன அம்மாசியின் வாரிசுகள் அனைவரையும் இவ்வழக்கில் சேர்த்துள்ளனர் என்றால் ஆமாம். வழக்கு சொத்துக்கள் பரம்பரை சொத்துக்கள் என்றால் ஆமாம். எந்த வருடம், எந்த தேதியில் வாய்மொழி பாகப்பிரிவினை செய்யப்பட்டுள்ளது என்றால்

படிப்பறிவு இல்லை என்பதால் தெரியாது. சத்தியபிரமாண வாக்குமூலத்தில் தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. பதில் வழக்குரையில் எவ்வளவு சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டது என்பது குறித்து என கேட்டதற்கு சாட்சி கேட்ட கேள்விக்கு பதில் அளிக்காமல் உள்ளார். தற்போது என்னென்ன சொத்துக்கள் எவ்வளவு விஸ்தீரணம் ஒதுக்கப்பட்டது என்பது தற்போது என்னால் கூறமுடியுமா என்றால் முடியும். சர்வே எண், பட்டாஎண் பத்திரத்தில் உள்ளது, குறித்து வரவில்லை. 1 ஏக்கர் 30 செண்ட்டில் ஆளுக்கு பாதி ஓட்டிவருகிறோம். நான் ஓட்டும் நிலம் எத்தனை இடத்தில் உள்ளது என்றால் ஒரு இடத்தில் உள்ளது. வாதி ஓட்டும் இடம் எத்தனை இடங்களில் உள்ளது என்றால் இரண்டு இடங்களில் உள்ளது. பழனியப்பன் ஓட்டும் இடம் 50 செண்ட், வீட்டு இடம் 20 செண்ட். எனக்கு நினைவுதெரிந்து முன்சிப் –ஐ வைத்து ஒவ்வொருவருக்கும் இவ்வளவு நிலம் என அளந்து பார்க்கப்பட்டதா என்றால் இல்லை. என்னுடைய தகப்பனார் இருக்கும்பொழுது கயிறு கட்டி அளந்து கொடுத்தார், முன்சிப் வைத்து அளக்கவில்லை. யாரும் அதுபோல் அளக்கவில்லை எனவும், பிரித்து கொடுக்கவில்லை எனறாலும் சரியல்ல. பாகத்தில் வாய்மொழி பாகம் யார்யாருக்கிடையே பாகம் நடைபெற்றது என்றால் 65 செண்ட் என்னுடைய தாயாருக்கு, எனக்கு 60 இருக்கும், வாதிக்கு 10 செண்ட் சேர்த்து இருக்கும். அப்போது என்னுடைய தகப்பனார் இருந்தாரா என்றால் இருந்தார். என்னுடைய தகப்பனாருக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்றால் தனியாக ஒதுக்கவில்லை, அந்த 65 செண்ட் தான். என்னுடைய தாயார் பெயர் அய்யம்மாள். மேற்படி பிரித்தது குறித்து பதில் வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் தற்போது தான் கூறியுள்ளேன். அய்யம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட 65 செண்ட்டின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும். வெங்காடஜலம் காட்டிற்கு வடக்கே, சின்னப்பையன் காட்டிற்கும் மேற்கே, பொன்னுசாமி நிலத்திற்கும் தெற்கு மற்றும் கிழக்கு. எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் நான்கெல்லை மாரிமுத்து நிலத்திற்கும் வடக்கே, சந்திரா நிலத்திற்கும் கிழக்கு, பழனி நிலத்திற்கும் தெற்கு, பழனியப்பன் நிலத்திற்கும் மேற்கு. இதற்கு மத்தியில் எவ்வளவு நிலம் என்றால் 30 செண்ட் இருக்கும். வேறு ஒரு இடத்தில் 30 செண்ட் உள்ளது. மணி நிலத்திற்கும் தெற்கு, அய்யண்ணன் நிலத்திற்கு மேற்கு, மாரிமுத்து நிலத்திற்கும் கிழக்கு, சாமிகண்ணன் நிலத்திற்கும் வடக்கு என்கிற நான்கெல்லைகள் அந்த மற்றொரு நிலம் உள்ளது. அதன் அளவு எவ்வளவு என்றால் 30 செண்ட் இருக்கும்.

பழனியப்பனுக்கு ஒதுக்கிய சொத்தின் நான்கெல்லை சாமிகண்ணு நிலத்திற்கும் மேற்கு, பழனிசாமி நிலத்திற்கும் கிழக்கு, பூசாரி நிலத்திற்கும், மினியப்பன் நிலத்திற்கும் தெற்கு, வடக்கே என்னுடைய நிலம் உள்ளது. இதற்கு மத்தியில் 60 செண்ட் உள்ளது. வேறு இடம் என்னவென்றால் வேறு இடம் இல்லை. வாதிக்கு இரண்டு இடத்தில் ஒதுக்கியதாக கூறியதாக கூறியது சரியா, தவறா என்றால் சரிதான். வீடு கட்டியது போக மீதி உள்ள இடத்தை ஓட்டிக்கொண்டு தான் இருக்கிறார். வீடுகட்டிய பகுதி எவ்வளவு இருக்கும் என்னவென்றால் 20 செண்ட் இருக்கும். எவ்வளவு அளவில் வீடு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அது கட்டி 70 வருடங்கள் இருக்கும். கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வீட்டின் நான்கெல்லை மணி நிலத்திற்கும் வடக்கு, பழனி நிலத்திற்கும் தெற்கு, என்னுடைய நிலத்திற்கும் கிழக்கு மற்றும் மேற்கு. அதன் மத்தியில் தான் 20 செண்ட் உள்ளதாகவும், அது முழுவதிலும் வீடு கட்டியதாக கூறுகிறேன் என்றால் ஆமாம். வாதிக்கும், எனக்கும் எவ்வளவு வருடங்களாக பிரச்சிணை என்றால் 7 வருடங்களாக பிரச்சனை. என்ன பிரச்சினை என்றால் என்ன பிரச்சினை என்று இதுவரை தெரியவே இல்லை. பாகம் பிரிக்க பஞ்சாயத்து கூட்டினார்களா என்றால் இல்லை. வழக்கிற்கு முன்பு என்ன பத்திரம் எழுதினேன் என்றால் எந்த பத்திரமும் எழுதவில்லை. மயிலியிடம் கிரய பத்திரம் எழுதப்பட்டது. மயிலி என்னுடைய தங்கை. மயிலிக்கு என்னுடைய தாயார் உயில் எழுதிவைத்த சொத்தை வாங்கினேன். வழக்கிற்கு முன்பு என்றால் ஆமாம். அந்த பத்திரம் செல்லாது என வாதி கோருகிறார் என்றால் எல்லா பத்திரங்களையும் தான் செல்லாது என கோருகிறார். இந்த வழக்கில் என்னென்ன பத்திரங்கள் செல்லாது என கூறுகிறார் என்றால் மணியிடம் வாங்கிய பத்திரமும் செல்லாது என கூறுகிறார். பழனிசாமியின் பத்திரத்தையும் தாக்கல் செய்து செல்லாது என கூறுகிறார். பழனிசாமி, மணி ஆகியோரிடம் நான் கிரையம் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை, அந்த சொத்துக்களில் பாகம் உள்ளது என வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். பூர்வீக சொத்துக்கள் குறித்து பொய் கிரயம் செய்ததால் தான் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 10.11.2012 ல் வாதி பஞ்சாயத்து வைத்து பாகம் கோரினார் என்றால் இல்லை. வழக்கு நடந்து வரும் விபரம் மயிலிக்கு தெரியுமா என்றால் தெரியும்.

வாதி வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/—எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.